# “கென்யாவிலிருந்து”

ஆப்பிரிக்கப் பணி சபையின் 30 நாடுகளின் பிரதிநிதிகள் கென்யா நாட்டின் (Kenya) தலைநகரான நைரோபியில் ஒன்று கூடினோம். நைரோபி உலகின் மிக அழகிய நகர்களில் ஒன்றாகக் கருதப் படுகின்றது. விமான நிலையத்திலிருந்து வீடு செல்லும் வழியில் ஒட்டகச் சிவிங்களும் (giraffes) வரிக் குதிரைகளும் (zebras) சிறு கூட்டமாக நின்று உங்களை உற்றுப் பார்க்கின்றன. காட்டுப் பன்றிகள;; (wild boars) மக்கள் நடமாட்டத்திற்கிடையிலும் அச்சமில்லாமல் புல் தரையில் உணவு தேடி மேய்கின்றன. இலங்கையிலும் சென்னையிலும் இருப்பது போன்று இங்கும் யானைக் குட்டி அனாதை மடம் (elephant orphanage), ஒட்டகச் சிவிங்க வளர்ப்பு மடம் (giraffe hostel), தீக்கோழிப் பண்ணை (ostrich farm), மேலும் Kjiy, பாம்புப் பண்ணைகள் (snake park and crocodile park), இங்கு உள்ளன. நகரெங்கும் உல்லாசப் பிரயாணிகள் கூட்டம்.

இந்நாட்டின் காடுகளை அழியாமல் பாதுகாத்தமைக்காகவும், வெட்டப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் பதிலாக மூன்று மரங்களை நட வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்து நாட்டின் வளமையைப் பொறுப்புடன் பேணியமைக்காகவும் இந்நாட்டின் பழைய மந்திரியான Wangari Mathai என்பவருக்கு உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப் பட்டது என்பது எங்களுக்கு நினைவிருக்கலாம். பழைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் (Barak Obama) தந்தை இந்நாட்டைச் சேர்ந்தவர் தான் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்தியர்கள் இங்கு மிக அதிகமாக வாழ்வதாலும், அனைவரும் வணிகம் செய்து மிகுந்த செல்வந்தர்களாக இருப்பதாலும் இந்தியர்கள் மீது இங்குள்ள மக்களுக்கு சற்றுப் பொறாமையே. மேலும் இந்தியக் கலாச்சாரத்தில் ஊறிப் போனவர்கள் ஆப்பிரிக்க மக்களுடன் நெருங்கிப் பழகுவதில்லை என்பதும் உண்மையன்றோ?

இன்று நைரோபியில் பல இலட்சக்கணக்கான அகதிகள் வந்து குவிகின்றனர். இவர்கள் கொங்கோ (Congo), சொமாலியா (Somalia), சூடான் (Sudan), மேலும் கென்யா நாட்டின் வட பகுதியில் ஏற்பட்டுள்ள வறட்சியால் தலைநகரை நோக்கித் தள்ளப் படும் கென்ய மக்கள் ஆகியோராவர். இவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து இவர்களுக்கு வழி காட்டக் கத்தோலிக்கத் திருச்சபையின் உதவியை கென்ய அரசாங்கம் மிகவே எதிர் பார்க்கின்றது. ஒவ்வொரு பங்கிலும் அகதி உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. வரும் அகதிகளுக்குத் தங்க இடமும், சிறிய தொழில் வசதிகளும் பெற இக்குழுக்கள் முன்னின்று பணி புரிகின்றன.

கென்யாவில் மற்றுமொரு நிலைமை என்னவென்றால் ஒவ்வொரு பங்கிலும் நூற்றுக்கணக்கான மக்கள் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களாக மாறுகின்றனர். ஆப்பிரிக்க சனங்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துத் தர கிறிஸ்துவை நோக்கித் திரும்புகின்றனர். குடும்பத்திற்கு அமைதியும், வாழ்வதற்குத் தேவையான ஊக்கமும், உலக அரங்கிலே தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற எதிர் காலமும் திருச்சபையிடம் தான் கிடைக்கும் என்று இவர்கள் நம்புகின்றனர். உலகம் மிகவே சுருங்கி வரும் இக்கால கட்டத்தில் மனித குலமனைத்தும் ஒரு குடும்பமாக மாறி வருகின்றது. எனவே ஆப்பிரிக்க மக்களின் மகிழ்ச்சி மற்றவர்களையும் தொடும். அவர்களின் ஏழ்மை மற்றவர்களின் ஏழ்மையுமாகும். எனவே இம்மக்களின் நம்பிக்கை வீண் போகாமல் இருக்கும் வரம் அனைத்தையும் நல்ல மனமுள்ள இந்த மக்களுக்கு இறைவன் நிறைவாக அளிப்பாராக.

கிறிஸ்துவில் அன்புடன்,

Rev. Fr. Tiburtius Fernandez. SMA